1992 பிப்ரவரி 4]

30—

ஒட்டன்சத்திரம் தொகுதியில் விசைத்தறி ஆலைகள்

*172—திரு. ஏ. டி. செல்லசாமி:

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தொழில்துறையில் பின்தங்கிய ஒட்டன்சத்திரம் தொகுதியில் விசைத்தறி ஆலைகள் பெருமளவில் துவக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ):

தொழில் துறையில் பின்தங்கிய பகுதியான ஒட்டன்சத்திரம் தொகுதியில் 'கேதையுறம்பு' கிராமத்தைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு பிரதம விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் நிறுவ பதிவு செய்யப்பட்டுள்ளது. இதன்மூலமாக துவக்கத்தில் 31 தறிகள் மட்டும் நிறுவுவதற்குத் தேவையான நிதியுதவிக்கு இந்தத் துறை நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. தற்போது ஒட்டன்சத்திரத்தைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு விசைத் தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் துவக்கும் கருத்துரு கைத் தறித் துறையில் இருக்கிறது என்பதை அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-10

திரு. ஏ. டி. செல்லசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய தொகுதி மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளது. மேலும் எங்களுடைய தொகுதிக்குட்பட்ட கிராம மக்கள் தொழில் எதுவும் இல்லாமல் வேறு மாவட்டங்களுக்குச் சென்று வருகிறார்கள். அங்கே விவசாயக் கூலியைத் தவிர வேறு எந்தத் தொழிலும் கிடைப்பதில்லை. ஆகவே விரைவாக நம்முடைய மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியில் அங்கே ஒரு கூட்டுறவுச் சங்கம் ஏற்படுத்தி அங்கேயுள்ள ஏழைத் தொழிலாளர்களுக்கு நிரந்தர வேலை வாய்ப்பு கிடைப்பதற்கு என்று அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிக விரைவில் 51 தறிகள் கொண்ட ஒரு கூட்டுறவு அமைப்புச் சங்கம் கேதையுறம்பு கிராமத்தில் உருவாக இருக்கிறது. இன்னொன்று ஒட்டன்சத்திரத்தை மையமாகக் கொண்டு இன்னொரு கூட்டுறவுச் சங்கம், விசைத் தறி கூட்டுறவுச் சங்கம் துவக்குவதற்காக பரிசீலனையில் உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 31. திரு. கோ. காளன். மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

31—அம்பத்தூர் பகுதியில் மின்சாரத் தடங்கல்.

* 1609—திரு. கோ. காளன்:

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

அம்பத்தூர் பகுதியில் அடிக்கடி மின்சாரத் தடங்கள் ஏற்படுவதைத் தடுக்க அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்பத்தூர் பகுதியில் ஏற்படுகின்ற மின்சாரத் தடைபற்றி இப்போது அரசின் கவனத்திற்குக் கொண்டுவருகின்ற நேரத்திலே உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கோ. காளன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்பத்தூர் பகுதி என்பது ஒரு தொழில் கேந்திரமான பகுதியாகும். தொழிற்சாலைகளுக்கும், வீடுகளுக்கும்-டொமஸ்டிக் பர்பஸுக்கும் ஒரே சப்-ஸ்டேஷன் மூலமாக மின் இணைப்புகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. தொழிற்சாலைகளுக்கு அதிகமாகத் தேவைப்படுகின்ற நேரத்தில் வீடுகளுக்கு கரண்ட் சரியாக வருவது கிடையாது. அதிலும் குறிப்பாக 20, 25 ஆண்டுகளுக்கு முன்பாகப் போடப்பட்ட மின் லைன்கள் மிகவும் சேதாரம் அடைந்து, அடிக்கடி அந்தப் பகுதியில் மின் ஒயர்கள் அறுந்து விழுந்து பல விபத்துக்களை ஏற்படுத்துகிறது. அதேபோன்று அம்பத்தூர் பகுதி சிறிதாக இருந்தபோது அன்றைய தேவையை அனுசரித்து டிரான்ஸ்பார்மர்கள் அமைக்கப்பட்டது.